ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2168/5 - 2020 මාර්තු මස 24 වැනි අඟහරුවාදා - 2020.03.24
*2168/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 24 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ.

**சனாதிபதியின் பணிப்புரை**

1. திரு.எஸ்.பீ.திவாரத்ன அவர்கள்
   ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர்
2. திரு.வி.சிவஞானசோதி அவர்கள்
   ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர்
3. பேராசிரியர் எச்.என்.டப்ளிவ்.ஆரியரத்ன ஹேரத் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழகம்
4. பேராசிரியர் சிரந்த ஹீன்கெந்த அவர்கள்
   களனி பல்கலைக்கழகம்
5. கலாநிதி எஸ்.எஸ்.சிவகுமார் அவர்கள்
   சிரேட்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
6. திரு.நிமல் அபேசிறி
   ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர்
7. வைத்தியர் அநுருத்த பாதெணிய
   மருத்துவ நிபுணர்
8. வைத்தியர் (திருமதி) சஜீவனீ ஹபுதெனிய

1A - G 32208 — 42 (2020/03)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

9. திரு.சுமேத பெரேரா
ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால்

10. திருமதி கயாத்திரி குணருவன்

11. திரு.சஞ்ஜீவ குணவர்த்தன
நிறைவேற்று உத்தியோகத்தர், ஈ. டப்ளிவ். கிறீசி மற்றும் கம்பனி

12. திரு.சமந்த குமாரசிங்க
தலைமையதிபதி, நேச்சர்ஸ் சீக்கிரட் நிறுவனம்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, 2159/64 ஆம் இலக்க 2020.01.25 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிய சனாதிபதி பணிப்புரையின்மூலம் வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்காகச் செயலணியொன்று நிறுவப்பட்டுள்ளதாதலாலும்,

சொல்லப்பட்ட செயலணிமூலம் கிராமிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு அடிப்படைத் தேவைகளான நிதி, கல்வி, சுகாதாரம், உணவு, துப்புரவேற்பாடுகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளைக் குறுகிய காலத்திற்குள் பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளதாதலாலும்,

மேலும், மேற்போந்த செயலணியினால் எதிர்பார்க்கப்படும் பிரதிபலன்களை எய்துவதற்காகத் துறைசார்ந்து செயற்படுவதனால் மேலும் இதன் செயற்பாடுகளை மக்களிடத்தில் கொண்டுசெல்லும் தேவை இனங்காணப்பட்டுள்ளதாதலாலும்,

மேலும், மேற்குறிப்பிட்ட செயலணியின் அலுவல்களை ஒருவருட காலத்திற்குள் பூர்த்திசெய்ய எதிர்பார்க்கப்படுவதாத லாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், **ஓய்வுபெற்ற பிரதித் திறைசேரிச் செயலாளர் எஸ். பீ. திவாரத்ன அவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரால் சுமேத பெரேரா** ஆகியோரை மேற்போந்த சனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் நியமிக்கப்பட்ட வறுமையை ஒழித்தல் மற்றும் வாழ்வாதார அபிவிருத்திக்கான செயலணியின் இணைத் தலைவர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு மாச்சு மாதம 24 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.